செய்தி வெளியீடு எண் –868 நாள் – 16.10.2008

**<u>தீபாவளியை முன்னிட்டு ஆவின் சிறப்பு இனிப்புகள் விற்பனைக்கு அறிமுகம்</u>**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு உ.மதிவாணன் அவர்கள், ஆவின் நிறுவனம் தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ள சிறப்பு இனிப்புகள் அடங்கிய அழகிய வண்ணப்பெட்டியின் முதல் விற்பனையை 16.10.2008 அன்று காலை தலைமைச்செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

ஆவின் பாலில் தயாரிக்கப்பட்ட பல்வேறு வகையான இனிப்புகள் 550 கிராம் எடை அளவு இந்தப்பெட்டியில் இருக்கும். இதன் விலை ரூ.100/– மட்டுமே. ஆவின் சிறப்பு இனிப்புகள் அடங்கிய பெட்டிகள், ஆவின் பாலகங்கள் மற்றும் ஆவின் உரிமம்பெற்ற சில்லறை விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

இந்த நிகழ்ச்சியில் கால்நடைபாமரிப்பு, மீன்வளம் மற்றும் பால்வளத்துறை செயலர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப, பால்வளத்துறை ஆணையர்/நிர்வாக இயக்குநர் திரு அபூர்வவர்மா, இ.ஆ.ப., பால்வளத்துறை துணை ஆணையர் திரு எம். ரவிக்குமார், ஆவின் இணை நிர்வாக இயக்குநர் திரு என். சுப்பையன், ஆவின் பொதுமேலாளர் (விற்பனை) திரு எஸ்.கே. கதிர்வேலு மற்றும் ஆவின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.